<u>தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம்</u>

**தொழில் நுட்பக் கிளை**

***

<u>கு.எண். த.பொ/வணிகம்/மே.பொ/வணிகம்/செ.பொ.3/உ.செ.பொ.3/F.ஒருநாள் SC திட்டம்/ D.104/2017, நாள். 14.06.2017.</u>

பொருள்:–மின்சாரம் – மின்சாரம் வழங்கல் நீட்டிப்பு – தாழ்வழுத்த குடியிருப்பு மின்இணைப்பு மற்றும் வணிக மின்இணைப்புகளுக்கு (சிறப்பு மற்றும் பன்அடுக்கு கட்டிடங்கள் அல்லாத) ஒரே நாளில் மின்இணைப்பு வழங்குதல் – அறிவுரைகள் வழங்குதல் – குறித்து.

பார்வை:–1.Memo No.SE/IEMC/EE3/AEE2/F.94/D.392/2000, dated 05-08-2000
2.(Per) (CMD) TANGEDCO Proceedings No.362 Dated : 04.08.2016.
3.Memo No.CE/Comml/SE/Comml/EE3/AEE3/F.OnlineAppln./D.66/2016, dated 05.08.2016

***

1. பொதுமக்களின் நலனை பெரிதும் கருதி, தாழ்வழுத்த குடியிருப்பு மற்றும் வணிக வகைகளுக்கு (சிறப்பு மற்றும் பன்அடுக்கு கட்டிடங்கள் அல்லாத) ஒரே நாளில் மின்இணைப்பு வழங்கும் திட்டத்தினை அறிமுகம் செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது. அவை நீட்டிப்பு அல்லாத மின்இணைப்பு வழங்குவதற்குட்பட்டதாகும் என்பதுடன் பூமிக்கடியில் சேவை இணைப்பு புதைவடங்களை (Service connection cable) நிறுவுதல் உள்ளடங்கும் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திலிருந்து எவ்வித நீட்டிப்போ அல்லது மேம்பாடு பணிகளோ இருக்காது.

2. இத்திட்டத்தின் கீழ், தாழ்வழுத்த மின்இணைப்பு தேவைப்படும் குடியிருப்பு மற்றும் வணிக வளாகங்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் பிரதான மின்மையத்திலிருந்து 100 அடிக்குள் இருக்கவேண்டும். அப்படி இருக்கும் பட்சத்தில் ஒரே நாளில் மின்இணைப்பு வழங்கப்படும் அல்லது சாலையைத்தோண்டி பூமிக்கடியில் சேவை இணைப்பு புதைவடங்களை புதைக்கும் பட்சத்தில் அதிகபட்சமாக 48 மணி நேரங்கள் ஆகும்.

3. குடியிருப்பு/வணிக மின் இணைப்புகளுக்கான விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலமாகவோ (www.tangedco.gov.in) அல்லது நேரடையாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் பிரிவு அலுவலகங்களில் தொடர்புகொண்டு விண்ணப்பிக்கலாம். பின்வரும், ஏதேனும் ஒரு தன்னுடைய சான்றுடன் கூடிய வருடி நகலுடன் (Scanned copies) விண்ணப்பத்தை பூர்த்தி செய்து இணைத்து / பதிவு ஏற்றம் செய்யப்பட்டு (எப்படி விண்ணப்பிக்கப்படுகிறதோ அதன்படி) விண்ணப்பதாரர்கள் அதனை வழங்க வேண்டும்.

(i) விற்பனை பத்திரம்/பாகம் பிரிக்கப்பட்ட பத்திரம்/ நன்கொடை குடியிருப்பு/ இடஒதுக்கீடு கடிதம் / கணிணி பட்டா/ வருவாய்த்துறை அதிகாரிகளினால் வழங்கப்பட்ட உடைமை சான்றிதழ் / நீதிமன்ற தீர்ப்பு நகல் அல்லது சமீபத்தில் செலுத்திய சொத்துவரியின் ரசீது

அல்லது

(ii) கூட்டு சொத்தாக இருக்கும் பட்சத்தில், மேலே குறிப்பு (i)–இல் குறிப்பிடப்பட்டுள்ள படி அசல் ஆவணங்களுடன் சட்டபூர்வமான வாரிசு சான்றிதழ் போன்ற உடைமையுரிமை ஆதாரம் கொண்ட சான்றளிக்கப்பட்ட நகல்கள் மற்றும் கூட்டு உடைமை உரிமையாளர்களிடமிருந்து இசைவு கடிதங்கள்.

அல்லது

(iii) உடைமைதாரர் அல்லாத விண்ணப்பதாரராக இருக்கும் பட்சத்தில், படிவம் 5–இல் உடைமைதாரர் அவர்களின் இசைவு கடிதம் அல்லது குடியிருப்புக்கான கச்சிதமான ஆதாரம் மற்றும் படிவம் எண் 6–இல் இழப்பெதிர் காப்புப் பிணைப்பு.

4. இணையதளத்தில் கட்டணங்கள் செலத்துவதற்கு முன்பு பதிவு ஏற்றம் செய்யப்படும் கச்சிதமான ஆவணங்கள் முழுமையான வடிவத்தில் உள்ளனவா என்று குடியிருப்பு/வணிக மின் இணைப்புகள் கோரும் விண்ணப்பதாரர்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும். விண்ணப்பதாரர்களினால் பதிவு ஏற்றம் செய்யப்படும் ஆவணங்கள் முழுமையான வடிவத்தில் இல்லாமல் காணப்பட்டால் அதனை சம்மந்தப்பட்ட அதிகாரி தானே ரத்து செய்து அத்தகவலை அறிவிப்பு/மின்அஞ்சல்/குறுஞ்செய்தி ஆகியவற்றின் மூலமாக விண்ணப்பதாரர்களுக்கு தெரிவிக்கப்படும். எனினும், பார்வை (2) மற்றும் (3) – இல் குறிப்பிட்டுள்ளபடி விண்ணப்பத்தை ரத்து செய்வதற்கு முன்பு அவற்றில் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை பிரிவு அலுவலர் பின்பற்ற வேண்டும்.

5. விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கு முன்பு சம்பந்தப்பட்ட அதிகாரி உரிய கவனம் செலுத்த வேண்டும். விண்ணப்பங்களை ரத்து செய்யும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட மேற்பார்வை பொறியாளரிடமிருந்து உரிய ஒப்புதல் பெறப்பட்ட பின்பு பதிவு கட்டணங்கள் தவிர முழுதொகையினையும் விண்ணப்பதாரர்களுக்கு திருப்பி செலுத்த வேண்டும்.

6. பிரிவு அலுவலகங்களில் நேரிடையாக விண்ணப்பங்களை பெறும் பட்சத்தில், முழுமையான வடிவில் விண்ணப்பங்களை சமர்பிக்கும்படி விண்ணப்பதாரர்களுக்கு பிரிவு அலுவலர்கள் வழிகாட்ட வேண்டும்.

7. இதன் தொடர்பாக பின்வரும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன:

(1) மின் இணைப்புகள் வழங்குவதில் ஏற்படும் காலதாமதங்களை தவிர்க்க, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திலிருந்து மேம்பாடு பணிகள் அல்லது மின் இணைப்பு நீட்டிப்பு இல்லாமல் மின்கம்பிகளை நிறுவுதல் போன்றவை உள்ளடங்கி உள்ள வெறும் மின் இணைப்புகள் தொடர்புடைய குறைந்தழுத்த குடியிருப்பு மற்றும் வணிக பிரிவினர்களுக்கு மின் இணைப்பு மதிப்பீடுகளை சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலர்களுக்கே ஒப்புதல் வழங்க அதிகாரம் வழங்கப்படுகின்றது. மேலும், கோரிக்கை படிவங்களில் உதவி செயற் பொறியாளர்களில் மேற்கையொப்பம் இல்லாமலே உருளும்

இருப்பு மின் அளவிகளை (rolling stock meters) வாங்க சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

(2) இதன் தொடர்பாக உருளும் இருப்பு மின் அளவிகளை வழங்குதல் மற்றும் பிற தொடர்பான செயல் அறிவுரைகள் அட்டவணை A–வில் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், அட்டவணை B–வில் குறிப்பிட்டுள்ளபடி rolling stock meter–களுக்காக தனி பதிவேட்டினை பராமரிக்க வேண்டும்.

(3) வெறும் நீட்டிப்பு அல்லாத மின்இணைப்பு வழங்கும் பிரிவின் கீழ் தாழ்வழுத்த குடியிருப்பு அல்லது வணிக மின் இணைப்புகள் தேவைப்படும் கட்டிடங்கள் (சிறப்பு மற்றும் பன்னடுக்கு கட்டிடங்கள்) உள்ளடங்குமென்றால், அவற்றுக்கு ஒரே நாளில் மின் இணைப்பு வழங்கப்படுவதுடன் மற்றும் சாலையை வெட்டி பூமிக்குள் சேவை இணைப்பு புதைவடங்களை புதைக்கும் பணிகள் உள்ளடங்கும் பட்சத்தில் 48 மணி நேரங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படும். மின் இணைப்பு நீட்டிப்பு அல்லது மேம்பாடு பணிகள் உள்ளடங்கும் இதர பிரிவிலுள்ள மின் இணைப்புகளுக்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்கு முறை விதிகளில் (Distribution Standards of Performance Regulations) குறிப்பிடப்பட்டுள்ள கால அட்டவணையின்படி பின்பற்றப்படும்.

(4) இணையதளம் மூலமாக தாழ்வழுத்த குடியிருப்பு மற்றும் வணிக மின் இணைப்பு கோரி விண்ணப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கு, பார்வை (2) மற்றும் (3) – இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றப்படும் என்பதுடன் அவை வெறும் நீட்டிப்பு அல்லாத மின் இணைப்பு வழங்கும் பிரிவின் கீழ் வரும் என்றால், ஒரே நாளில் மின் இணைப்பு நீட்டிக்கப்பட்டு வழங்கப்படும் அல்லது சூழ்நிலைக்கு ஏற்ப 48 மணி நேரத்திற்குள் மின் இணைப்பு வழங்கப்படும்.

(5) மின் இணைப்பு நீட்டிப்பு உள்ளடங்கிய தாழ்வழுத்த குடியிருப்பு மற்றும் வணிக மின் இணைப்புகள் தொடர்புடைய விண்ணப்பங்களை பதிவு செய்யப்படும் நேரத்தில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் நிர்ணயம் செய்யப்பட்ட பதிவு கட்டணங்கள், மின் இணைப்பு கட்டணங்கள், மின் அளவி காப்பீடு கட்டணம், வளர்ச்சி கட்டணம் மற்றும் ஆரம்ப மின் பயன்பாடு கட்டணம் போன்ற பல்வகை கட்டணங்கள் வசூலிக்கப்படலாம். M.P. எண். 41/2003–இன் மூலமாக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் ஒப்புதல் வழங்கப்பட்ட பல்வகை கட்டணங்களின் விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளது:

| வ.எண் | கட்டண விவரம் | வீட்டு உபயோகத்திற்காக | | வணிக உபயோகத்திற்காக | |
|---|---|---|---|---|---|
| | | ஒரு முனை மின்இணைப்பு (ரூபாய்) | மும்முனை மின்இணைப்பு (ரூபாய்) | ஒரு முனை மின்இணைப்பு (ரூபாய்) | மும்முனை மின்இணைப்பு (ரூபாய்) |
| 1 | பதிவு கட்டணம் | 50/– | 50/– | 50/– | 50/– |
| 2 | மின் இணைப்பு கட்டணம் | 250/– | 500/– | 250/– | 500/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | மின் அளவி காப்பீட்டு கட்டணம் | 700/– | 2500/– | 700/– | 2500/– |
| 4 | வளர்ச்சி கட்டணம் | 400/– | 1400/– | 400/– | 200/– ஒவ்வொரு கிலோ வாட்டிற்கும் |
| 5 | ஆரம்ப மின் பயன்பாடு கட்டணம் | 200/– | 600/– ஒவ்வொரு கிலோ வாட்டிற்கும் | 200/– | 600/– ஒவ்வொரு கிலோ வாட்டிற்கும் |
| | மொத்த கட்டணம் ஒரு முனை மின்இணைப்புக்கு | 1600/– | ––– | 1600/– | ––– |
| | மொத்த கட்டணம் மும்முனை மின்இணைப்புக்கு (4 kW க்கு) | ––– | 6,850/– | ––– | 6,250/– |

(6) இணையதளம் மூலமாக விண்ணப்பிக்கும் பொழுதோ அல்லது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அலுவலகத்தில் விண்ணப்பத்தை பதிவு செய்யும் பொழுதோ மேற்கூறிய கட்டணங்களை விண்ணப்பதாரர்கள் செலுத்த வேண்டும். மும்முனை குடியிருப்பு மற்றும் வணிக மின் இணைப்புகளுக்கு, விண்ணப்பம் பதிவு செய்யப்படும் நேரத்தில் 4 கி.வாட் மின் தேவைக்கான பல்வகை கட்டணங்களை விண்ணப்பதாரர்கள் செலுத்தி மின் இணைப்புகளை பெற்றுக் கொள்ளலாம்.

(7) மின் நுகர்வோரிகளிடமிருந்து மதிப்பீடு கட்டணங்கள் மற்றும் பல்வகை கட்டணங்கள் (மும்முனை குடியிருப்பு/வணிக மின் இணைப்புகள் தொடர்புடைய மின்தேவை 4 கி.வாட்டுகளுக்கு மேலே உள்ள மின்தேவைக்கு பொறுந்தும்) ஏதேனும் செலுத்தப்படவிருந்தால், அதனை முதல் மின் நுகர்வு ரசீதில் வசூல் செய்யப்பட வேண்டும். மேலும், அவ்விவரங்களை சம்பந்தப்பட்ட மின்நுகர்வோருக்கு அறிவிப்பு/மின்அஞ்சல்/ குறுஞ்செய்தி போன்றவற்றின் மூலமாக தெரிவிக்கப்பட வேண்டும்.

(8) எவ்வித காலதாமதமும் இல்லாமல் மின் இணைப்பு வழங்குவதற்கு ஏதுவாக பூமியின் கீழ் மின் இணைப்பு வழங்கும் சேவை இணைப்பு புதைவடங்கள் மற்றும் இதர மின் இணைப்பு கருவிகள் கிடங்குகளில் கிடைக்கும் வகையில் இருக்கும்படி த.பொ/பொருள் மேலாண்மை மற்றும் மின்பகிர்மான வட்டங்களில் உள்ள தலைமை பொறியாளர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மதிப்பீடு செலவுக்கு மேலாக சேவை இணைப்பு புதைவடங்கள் அல்லது புதைவடங்களுக்கான செலவுகளை பயன்படுத்தவுள்ள மின் நுகர்வோர்களை செலுத்தும்படி பிரிவு அலுவலர்கள் வலியுறுத்தக்கூடாது. மேலும், காலதாமதமின்றி மின் இணைப்பு வழங்கும் வகையில் போதுமான மின்இணைப்பு பொருட்களை பிரிவு அலுவலர் பராமரிக்கவேண்டும்.

(9) நாள்தோறும் என்ற அடிப்படையில் ஒருநாள் மின் இணைப்பு திட்டத்தினை கண்காணிக்கப்படுவதுடன் அவற்றில் ஏதேனும் தளர்ச்சி காணப்படுமேயானால் சம்பந்தப்பட்ட செயற் பொறியாளர்/மேற்பார்வைப் பொறியாளர்கள் அதற்கு பொருப்பாவார்கள். மேலும், (இத்திட்டம்) இதனை குறித்து மிகப்பெரிய விளம்பரத்தை மின்பகிர்மான மேற்பார்வைப் பொறியாளர்கள் அமைக்க வேண்டும்.

(10) ஒரு நாள் மின் இணைப்புத்திறனை கண்காணிக்க மேற்பார்வைப் பொறியாளர்/வணிகம் அவர்கள் ஒருங்கிணைப்பு அலுவலராக செயல்படுவார். மூன்று நாளைக்கு ஒரு முறை மின் இணைப்பு வழங்கல், நிலுவை நிலை போன்றவற்றின் விவரங்களை அறிக்கையாக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்களுக்கு மேற்பார்வைப் பொறியாளர்/வணிகம் அவர்கள் வழங்க வேண்டும்.

(11) இத்திட்டத்தின் செயல்முறை முன்னேற்றத்தை கண்காணித்து பொது மக்களிடையே இத்திட்டம் சென்றடைய மின் பகிர்மான வட்டங்களுடன் இயக்குநர் (மின் பகிர்மானம்) அவர்களின் செயலாண்மை உதவியாளர் ஒத்துழைக்க வேண்டும்.

(12) பயனீட்டு மின் நுகர்வோர்கள் புதைவடம் அல்லது புதைவடத்திற்கான தொகையினை செலுத்தும்படி நிர்பந்திக்கப்படுகின்றனர் என்று சில குற்றச்சாட்டுக்கள் எழுகின்றன. அவ்வகையான குற்றச்சாட்டுகள் வரும்பொழுது, மின்அஞ்சல்: adgp@tnebnet.org, தொலைபேசி எண்: 044-28520416 தொலை நகல்: 044-28520749 மூலமாக பயனீட்டு மின் நுகர்வோர்கள் தங்களது புகார்களை காவல் துறை இயக்குநர்/விழிப்புப்பணி/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்களிடம் தெரிவிக்கலாம்.

(13) காவல் துறை இயக்குநர்/விழிப்புபணி அவர்களின் அலுவலகத்தில் பெறப்படும் புகார்களை விழிப்புபணி பிரிவினரால் ஆய்வு செய்யப்பட்டு தவறு செய்யும் அதிகாரியின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும், புகார்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை அறிக்கையினை சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் மேற்பார்வைப் பொறியாளர்/வணிகம் அவர்களுக்கு அனுப்ப வேண்டும், அப்படி அனுப்பப்பட்ட அறிக்கையினை தொகுத்து 15 நாட்களுக்கு ஒரு முறை தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்களுக்கு மேற்பார்வைப் பொறியாளர்/வணிகம் அவர்கள் அனுப்புவார்.

8. மேற்கூறியுள்ளபடி, இணையதளம் மூலமாக அல்லது நேரிடையாக தாழ்வழுத்த குடியிருப்பு மற்றும் வணிக மின் இணைப்புகளுக்கு விண்ணப்பிப்பது குறித்த நிகழ்வுகளின் கட்டுப்பாட்டில் உள்ள கள அலுவலர்களுக்கு மின் பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் மேற்கூறிய அறிவுரைகளை கட்டாயமாக பின்பற்ற அறிவுரை வழங்கும்படியான பொறுப்பை மின் பகிர்மான மண்டலங்களின் தலைமைப் பொறியாளர்கள் வழங்க வேண்டும்.

9. 01.07.2017 முதல் 'ஒரு நாளில் மின் இணைப்பு திட்டம்' செயலுக்கு வருவதுடன், இதன் தொடர்பாக ஏற்படும் பிழைகள் கடுமையாக பார்க்கப்படும்.

ஒப்பம்/–
இயக்குநர்/பகிர்மானம்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களுக்காக

**இணைப்பு:–** அட்டவணை – A மற்றும் B

பெறுநர்:

அனைத்து தலைமைப் பொறியாளர்கள்/விநியோகம்.

நகல்:

செயலாளர்/தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அவர்களுக்கு ஆணையத்தின் தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

தலைமைப் பொறியாளர்/பொருள் மேலாண்மை, தாமதமின்றி தேவையான பொருட்கள் வழங்க

அனைத்து மேற்பார்வைப் பொறியாளர்கள்/மின் பகிர்மான வட்டம்

தலைமைப் பொறியாளர்/தகவல் தொழில் நுட்பம், இணையதள பயன்பாட்டு தாக்கல் மென்பொருளில் தேவையான மாற்றங்கள் செய்ய.

தலைமைப் பொறியாளர்/திருத்தியமைக்கப்பட்ட, தெளிவுபடுததப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்பு திட்டம்.

தலைமை நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர்/பொது மற்றும் வருவாய்.

தலைமை அகநிலை தணிக்கை அலுவலர்/சென்னை – 2.

மேற்பார்வைப் பொறியாளர்/அமலாக்கம்/சென்னை – 2.

சட்ட ஆலோசகர்/சென்னை –2.

செயலாண்மை உதவியாளர் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்/த.மி.உ.ம.ப.க.

தணி உதவியாளர்/காவல்துறை இயக்குநர்/விழிப்புபணி/சென்னை – 2

செயலாண்மை உதவியாளர் இயக்குநர்/பகிர்மானம்.

நிர்வாக ஆணை எண்./நிர்வாகப் பிரிவு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் கசட் பிரிசுரிப்பதற்காக.

## அட்டவணை – A (செயல்முறை அறிவுரை)

1. காலை 8 மணிமுதல் 10 மணி வரை இணைதளம் மூலமாக அல்லது நேரிடையாக பிரிவு அலுவலரிடம் பெறப்படும் விண்ணப்பங்களை ஒரே நாளில் அல்லது நிகழ்வுக்கேற்பார்போல 48 மணி நேரத்திற்குள் மின் இணைப்பு வழங்க எடுத்துக் கொள்ளலாம். காலை 10 மணிக்கு மேல் பெறப்படும் விண்ணப்பங்களை மறு நாள் எடுத்துக் கொள்ளப்படும்.

2. பயனீட்டு மின் நுகர்வோர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை மேற்கூறிய நேரத்தில் செயல்முறை செய்திட பிரிவு அலுவலங்களில் உள்ள பிரிவு அலுவலர்கள் தவறாமல் இருக்க வேண்டும்.

3. ஆவணங்களை முழுமையாக ஆராய்வு செய்யப்பட்ட பின்பு, சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலர் அவர்கள் தேவையான மின் இணைப்புகள் மற்றும் மின் இணைப்புகளுக்கான இதர கட்டணங்களை பெற்று, நேரிடையாக மின் இணைப்பு தொடர்பாக விண்ணப்பித்த விண்ணப்பதாரருக்கு PR வழங்கப்பட வேண்டும். இணையதளம் மூலமாக மின் இணைப்பு தொடர்பாக பெறப்படும் விண்ணப்பங்களுக்கு, விண்ணப்பம் பதிவு செய்யப்படும் பொழுதே அறிவரையில் குறிப்பிடப்பட்டுள்ள முழு கட்டணத்தையும் விண்ணப்பதாரர் செலுத்த வேண்டும். தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் நிர்ணயிக்கப்பட்ட பல்வகை கட்டணங்களை தவிர ஏதேனும் மதிப்பீடு கட்டிடங்கள் காணப்படுமானால் அதனை முதல் மின் நுகர்வு ரசீது மூலமாக வசூலிக்கப்படும் என்ற விவரத்தை பயனீட்டு மின் நுகர்வோருக்கு அறிவிப்பு/மின் அஞ்சல்/குறுஞ்செய்தி மூலமாக தெரிவிக்கப்பட வேண்டும்.

4. மின் அளவிகளின் உருளும் இருப்பிலிருந்து இந்த காரணத்திற்கு மட்டுமே பராமரிக்கப்படும் தகுந்த மின் அளவிகளை வழங்கி, தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித்தொகுப்பு மற்றும் விண்ணப்பதாரர் வழங்கப்பட்ட அனைத்து அறிக்கைகளும் நிறைவுடன் காணப்படும்பட்சத்தில் மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும்.

5. அதைப்போல், அட்டவணை B- இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மின் இணைப்பு வழங்கப்படும் பொழுது மின் அளவியை ஈடுசெய்வதற்க்கான ஏற்பாடுகளை செய்து, உருளும் மின் அளவி இருப்புக்கான பதிவேட்டில் அதனை கணக்கிட வேண்டும்.

6. அனைத்து தகவல்களுடன் மின் இணைப்பு வழங்கப்பட்ட நிகழ்வை மின் இணைப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு, குறிப்பாக ஒரு நாளில் மின் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்ற விவரத்தை பதிவேட்டில் குறிப்பாக எழுத வேண்டும்.

7. வழங்கப்பட்ட மின் இணைப்பின் மீது சரியான பரிசோதனை செய்யும் வகையில் மற்றும் அவரது துணை கோட்ட அலுவலகங்களில் வழங்கப்படும் மின் இணைப்பு நடவடிக்கை விவரங்களை அறிந்துகொள்ள இரண்டு நாளைக்கு ஒரு முறை வழங்கப்பட்ட மின் இணைப்பின் விவரங்களை சம்பந்தப்பட்ட உதவி செயற் பொறியாளர் அவர்களுக்கு வழங்க வேண்டும். சம்பந்தப்பட்ட உதவி செயற் பொறியாளர் ஒவ்வொரு வாரமும் ஒரு நாளில் மின் இணைப்பு பதிவேட்டை பரிசோதித்தும், உருள் இருப்புகளையும் சரிபார்க்க வேண்டும். ஒரு நாளில் மின்

இணைப்பு திட்ட விண்ணப்பங்களில் எழும் ஏதேனும் குறைக்கு சம்பந்தப்பட்ட உதவி பொறியாளர் அவர்களே உடனடியாக அவருக்கு பதில் வழங்க வேண்டும்.

8. விண்ணப்ப படிவம் முழுமையான வடிவில் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் மின் இணைப்பு வழங்க இயலாத நிலையினை சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலர் அவர்கள் மின் இணைப்பு வழங்கப்படாத காரணத்தை விண்ணப்பதாரருக்கு அறிவிப்பு/மின் அஞ்சல்/குறுஞ்செய்தி ஆகியவற்றின் மூலமாக தெரியப்படுத்த வேண்டும்.

9. மின் இணைப்பு வழங்கும் பொழுது அவ்விணைப்புடன் மின் நீட்டிப்பு உள்ளடங்கும்மேயானால் மின் இணைப்பு வழங்கப்படாமல் அதனை மின் நீட்டிப்பு பிரிவிற்கு மாற்றம் செய்து, தகுந்த முறையில் செயல்முறைபடுத்தி DSOP ஒழுங்குமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள கால அட்டவணையின்படி பின்பற்ற வேண்டும். அறிவிப்பு/மின் அஞ்சல்/குறுஞ்செய்தி ஆகியவற்றின் மூலமாக விண்ணப்பதாரருக்கு தெரியப்படுத்த வேண்டும்.

10. இத்திட்டத்தின் கீழ் உள்ள மின் அளவியின் இருப்பு நிலை குறையாகாத வகையில் மற்றும் எந்த அளவிற்கு மின் அளவி இருப்பு குறைகின்றதோ அதனை மீண்டும் பூர்த்தி செய்யும் பொறுப்பு சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலருக்கே உரியது.

11. மேற்கூறிய திட்டத்திற்கு, கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி ஒவ்வொரு பிரிவு அலுவலத்திலும் பராமரிக்க வேண்டிய மின் அளவிகளின் இருப்புகளாவது;

| | <u>ஒரு முனை</u> | <u>மும்முனை</u> |
|---|---|---|
| ஊரக பிரிவு | 3 | 1 |
| நகர பிரிவு | 7 | 3 |

12. தேவைப்படும் உருள் இருப்பின் மதிப்பீட்டினை மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் தான் ஒப்புதல் வழங்க வேண்டும், மற்றும்மின்றி அவை ஒருமுறை ஒப்புதல் ஆக இருக்க வேண்டும். இந்த உருள் இருப்பில் உள்ள மின் அளவிகளை மின் பகிர்மானத்தில் வேறு எந்த காரணங்களுக்காகவும் பயன்படுத்தக்கூடாது.

13. உருள் இருப்பிலுள்ள மின் அளவிகளை எடுத்து பிரிவு அலுவலகத்தில் வைக்க வேண்டும். எவ்வித தவறான பயனீடு செய்யாமல் உருள் இருப்பு கணக்கினை சரியாக வைத்திருப்பது பிரிவு அலுவலரின் தனிப்பட்ட பொறுப்பாகும்.

14. திட்டம் பயனுள்ள வகையில் செயல்படுத்தும் வகையில் உருள் இருப்பு மின் அளவிகளை சரியான முறையில் பயன்படுத்தும் பொறுட்டு உதவி செயற் பொறியாளர்கள் அவ்வப்பொழுது சரிபார்க்க வேண்டும்.

15. இத்திட்டம் ஒவ்வொரு நாளும் என்ற அடிப்படையில் கண்காணிக்கப்பட வேண்டும் என்பதுடன் ஏதேனும் தவறு நேருமானால் சம்பந்தப்பட்ட செயற் பொறியாளர் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் பொறுப்பாவார்கள்.

16. இணையதள விண்ணப்பம் பொறுத்த வரையில், மின் இணைப்பு வழங்கிய பின்பு, பதிவு செய்யும் காரணத்திற்காக சம்பந்தப்பட்ட ஆவணங்கள், ஆய்வறிக்கை போன்றவற்றை

விண்ணப்பத்தின் ஒலி நகடுடன் செயற் பொறியாளர் அலுவலகத்தில் (வருவாய் கிளை) சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்கூறிய பணி அறிவுறுத்தல்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தோற்றத்தை பொதுமக்களிடையே நல்ல நிலையில் வைத்திருக்க, ஒரு நாள் அல்லது சூழ்நிலைக்கு ஏற்ப 48 மணி நேரத்திற்க்குள் குடியிருப்பு அல்லது வணிக மின் இணைப்புகள் (சிறப்பு மற்றும் பன்னடுக்கு கட்டிடங்கள் அல்லாத) வழங்க பின்பற்றபட வேண்டும்.

ஒப்பம்/—

இயக்குநர் (பகிர்மானம்)

## <u>அட்டவணை – B</u>

மின் அளவிகளின் உருளும் இருப்பின் பதிவு

**பக்கம் I** **மதிப்பாய்வு சீட்டு**

| ஆய்வு தேதி | ஆய்வு அதிகாரியின் பதவி | கருத்துகள் | நடவடிக்கை எடுத்த விவரம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |

**பக்கம் II** மின் அளவியின் உருளும் இருப்பின் மூல விவரங்கள் மற்றும் ஒரு நாள் மின்னிணைப்பு திட்டத்திற்க்காண மின் அளவிகளின் உருளும் இருப்பின் விவரங்கள்.

ஒப்புதல் குறிப்பு எண். :

பணி ஆணை எண். :

கோரிக்கை :

அனுமதிக்கப்பட்ட மின் அளவிகளின் எண்ணிக்கை : ஒரு முனை மும்முனை

**பக்கம் III**

| I | II |
|---|---|
| நீல மை | பச்சை மை |

வ. எண். மின் அளவியின் உருளும் இருப்பின் விவரங்கள்

| வ. எண். | பதிவு எண். மற்றும் தேதி | உற்பத்தி யாளர் | திறன் | வ.எண். | எம்.ஆர்.டி. எண். | ஆரம்ப மின் அளவு | மின் நுகர்வோர் பெயர் | மின் இணைப்பு எண். மற்றும் தேதி | கட்டண வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

III

சிவப்பு மை

---

**ரசீது பதிவு**

விண்ணப்பதாரருக்குண்டான ஒப்புதலுடன் பெறப்பட்ட விவரங்கள்
பத்தி II ல்

| பதிவு எண் மற்றும் தேதி | உற்பத்தி யாளர் | திறன் | வ. எண். | எம்.ஆர்.டி. எண். | ஆரம்ப மின் அளவு |
|---|---|---|---|---|---|
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 |

**<u>குறிப்பு:-</u>**

1) உருளும் இருப்பிலிருந்து மின் அளவி எடுக்கப்பட்ட விவரங்கள் பத்தி – Iல் குறிப்பிடுதல் வேண்டும்.

2) மின் இணைப்பு அனுமதிக்காக எடுக்கப்பட்ட மின் அளவியின் விவரங்கள் மற்றும் உருளும் இருப்பிற்காக வரவு வைக்கப்பட்ட விவரங்கள் பத்தி III மற்றும் Iல் குறிப்பிடுதல் வேண்டும்.

உதாரணம்:- முதல் விண்ணப்பதாரரின் மின் இணைப்பு அனுமதிக்காக மின் அளவி எடுக்கப்பட்ட விவரங்கள் பத்தி IIIன் வ.எண்.1 மற்றும் பத்தி Iல் உடனியாக மின் அளவியின் உருளும் இருப்பின் ஆரம்ப தொகுப்பிற்கு கீழே குறிப்பிடுதல் வேண்டும்.

ஒப்பம்/–
இயக்குநர் (பகிர்மானம்)